# தரிசனக் கவித்திரட்டு

சென்னைக்

கலவல கண்ணன் செட்டியார் உயர்கலாசாலைத்

தமிழாசிரியர்

வே. த. அர்ச்சுன முதலியார்

தொகுத்தது.

ஸ்ரீ சுப்பிரமணிய விலாசம் பிரஸ்,

சென்னை.

1930

# முன்னுரை

---

சுதரிசனக் கவித்திரட்டு என்னும் இந்நூல் அரசாங்கத்தார் விதிகளுக்கிணங்க நூதன முறைப்படி மாணவர்களுக் கேற்றவாறு தொகுக்கப்பட்டது. இதில் கடவுள் வணக்கம், நீதி, கதை முதலியவை அடங்கியுள்ளன. அக்கதைகளும் மாணவர்கள் மனத்தின்பம் பயக்குமாறு பொருளும், நீதியும், அழகும் அமைந்துள்ளன. இந்த ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்குத் தனித்தனிப் புத்தகமாக எழுதியதை எமது கலாசாலைத் தலைவர் கூறிய இன்றியமையாத யோசனையைக் கொண்டு மாணவர்களின் சவுகரியத்தை நோக்கி ஒரே புத்தகமாகச் சேர்த்து அச்சிட்டப்பட்டுள்ளது எனினும் மூன்று வகுப்புக்களுக்குப் முறையே முதல், இரண்டு, மூன்று எனப் பாகுபாடு தோன்ற தலைப்புப் பெயரிடப்பெற்றுச் செய்யுட்கள் ஆரம்பமாயிருக்கின்றன. இத்தன்மை அமையப்பெற்ற இச்சிறுநூலைக் கண்ணுற்று, கல்விச்சாலை அதிகாரிகள் தாங்கள் தங்கள் கலாசாலைகளில் பாட புத்தகமாக வைத்து எம்மை ஊக்குவார்களாக.

வே. த. அ.

# விஷய விளக்கம்.

1. கடவுள் வணக்கம்.
2 செந்தமிழ்
3. அடிகளாவார்
4. நீதி
5. தனிப்பாடல்
6. பழமொழி விளக்கம்
7. புலவர் வறுமை
8. கதை
9 கதையை யொட்டிய செய்யுட்கள்

# சுதரிசனக் கவித்திரட்டு

(முதலாவது பாரம்)

---

கடவுள் வணக்கம்.

ஓடு வார்விழு வாருகந் தாலிப்பார்
நாடு வார்நம்பி ரானெங்குத் தானென்பார்
பாடு வார்களும் பல்பறை கொட்டநின்
றாடு வார்களு மாயிற்றாய்ப் பாடியே.

(பெரியாழ்வார்)

நாமணக் குஞ்சொ னவின்றிட நெஞ்சமே!
தேமணக் கும்மலர் சேர்ந்த
காமணக் குங்கிருங் கழுக்குன்ற நாதனார்
பூமணக் கும்பதம் போற்றே.

(இராமசாமிப்புலவர்)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்வாய்
பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொன் கொடியே!
கனகக் குழையும்ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே!
சகலகலா வல்லியே!

(குமரகுருபரர்)

---

## வாக்குண்டாம்.

1. வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

2. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

3. நீரளவே யாகுமா நீராம்ப லுங்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தாம்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

4. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

5. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

6. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்

7. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

8. உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

9. எழுதியவா றேமென் றிரமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.

10 கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

11. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

12. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

13. சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடா தாதலால் — தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

14. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாந் — திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளொடும் போம்.

15. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர் — மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்

(ஔவையார்

---

## நீதிவெண்பா.

1. தாமரைபொன் முத்துச் சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா — தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்.

2. பகைசேரு மெண்ணான்கு பற்கொண்டே நன்கு
வகைசேர் சுவையருந்து மாபோற் — றொகைசேர்
பகைவரிடை மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத னல்லோர் தொழில்.

3. கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவார்க்கு — நண்ணும்
அருந்தத் தவத்தா லருள்ஞானம் பெற்றோர்க்
கநந்தம் விழியென் றறி.

4. ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடிய னாவானே — ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்.

5. நாவி னுனியி னயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரு நண்ணுவார் — நாவினுனி
ஆங்கடின மாகி லத்திருவுஞ் சேராண்முன்
ஏகே வருமரண மாம்.

6. ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே — நோக்கரிய
பைங்கோர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு துமவிடமே யாம்.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே — வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

8. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு — பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

9. ஈசனெதிர் நின்றாலு மீசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்ப தரிதாமே — தேசுவளர்
செங்கதிர்முன் னின்றாலுஞ் செங்கதிர வன்கிரணந்
தங்குமணி னிற்கரிதே தான்.

10. தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்றா ளிவரைவர் பேசி லிவருக்கும்
நற்றாய ரென்றே நவில்.

## இன்னா நாற்பது.

1. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணில் ஒருவன் வனப்பின்னா ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

2. குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை இன்னா
நலத்தகையார் நாணாமை இன்னா ஆங்கின்னா
கலத்தல் குலமில் வழி.

3. ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

4. பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்துமென வுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா இன்னா
பெரியார்க்குத் தீப செயல்.

5. நட்டா ரிடுக்கண்கள் காண்ட னனியின்னா
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா
கட்டில்லா மூதா ருறையின்னா ஆங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது.

# இனிது நாற்பது.

1. யானை யுடைய படைகாண்டன் மிகவினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

2. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

3. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு.

4. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேருந்
திருவுந் தீர்வின்றே லினிது.

5. குழவி தளர்நடை காண்ட லினிதே
அவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறம் போழ்து
மனனஞ்சா னாக லினிது.

## விவேக சிந்தாமணி.

1. ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்காவேந்தன் குருமொழிகொள்ளாச்சீடன்
பாபத்தைத் தீராத தீர்த்தம பயனில்லை ஏழுந் தானே.

2. ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே.

3. கதிர்பெறு செந்நெல் வாடக் கார்குலங் கண்டு சென்று
கொதிதிரைக் கடலிற்பெய்யும் கொள்கைபோற் குவலயத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீய மாட்டார்.

4. தண்டாமரையி னுடன் பிறந்தும் தண்டேனுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்தேகமல மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார்புல்லோரா நல்லோரை
கண்டேகளித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே.

5. தாங்கொணா வறுமைவந்தால் சபைதனிற் செல்லநாணும்
வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர்க் காணநாணும்
பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக் கிணங்கச்செய்யும்
ஓங்கிய அறிவுகுன்றும் உலகெல்லாம் பழிக்குந்தானே.

6. வீணர்பூண்டாலும் தங்கம் வெறும்பொய்யாம்மேற்பூச்சென்
பூணுவார்தராப்பூண்டாலும்பொருந்தியதங்கமென்பார்(பார்
காணவே பனைக்கீழ் ஆப்பால் குடிக்கினுங் கள்ளே என்பார்
மாணுல கத்தோர் புல்லர் வழக்குரை மெய் யென்பாரே.

7 செல்வச்சுற் றத்தார் போதா தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வதை அறிந் துசொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்
வெல்வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்.

8. கொண்டு விண்படர் கருடன்வாய்க் கொடுவரி நாகம்
விண்ட நாகத்தின் வாயினில் வெருண்டவன் தேரை
மண்டி தேரையின் வாயினில் அகப்படு வண்டு
வண்டு தேனுகர் இன்பமே மானிடர் இன்பம்.

---

## கதையை யொட்டிய செய்யுட்கள்.

1. வாயுள் வையகங் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திர னல்ல னருந்தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்
மாய னென்று மகிழ்ந்தனர் மாதரே.

2. அளந்திட்ட தூணை யவன்தட்ட வாங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க வுருவாய்
உளந்தொட் டிரணிய னொண்மார் வகலம் (பாணி.
பிளந்திட்ட கைகளாற் சப்பாணி பேய்முலையுண்டானே சப்

3. வாவென்று சொல்லியென் கைப்பிடித்து வலியவேகாதி
(ற்கடிப்பை
நோவத் திரிக்கி யுனக்கிங் கிழுக்குற்றென் காதுகள் நொந்
(திடுங் கில்லேன்
நாவற் பழங்கொண்டு வைத்தே னிவைகாணுப் நம்பீமுன் வ
(ஞ்ச மகளைச்
சாவப் பா லுண்டு சகடிறப் பாய்ந்திட்ட தாமோ தராவிங்கே
(வாராய்.

4. அண்டத் தமரர்கள் சூழ வத்தாணி யுள்ளங் கிருந்தாய்
தொண்டர்கள் நெஞ்சி லுறைவாய் தூமல ராள்மணவாள
உண்டிட் டுலகினை யேழுமோரா லிலை யிற்றுயில் கொண்டாய்
கண்டுநா னுன்னை யுகக்கக் கருமுகைப் பூச்சூட்ட வாராய்.

5. இன்ப மதனை யுபர்த்தா யிமையவர்க் கென்று மரியாய்
கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன் நெஞ்சினிற்கூற்றே
செம்பொன் மதிள்வெள் ளறையாய் செல்வத்தி னூல்வளர் பி
(ள்ளாய்
கம்பக் கபாலிகா ணங்குக் கடிதோடிக் காப்பிட வாராய்.

6. தடம்படு தாமரைப் பொய்கை கலக்கி
விடம்படு நாகத்தை வால்பற்றி யீர்த்துப்
படம்படு பைந்தலை மேலெழப் பாய்ந்திட்
டுடம்பை யசைத்தானு னின்றமுற்ற முச்சியி னின்றாடு
(னின்று முற்றம்.

7. மாயச் சகட முதைத்து மருதிறுத்
தாயர்க ளோடுபோ யாநிரை காத்தணி
வேயின் குழலூதி வித்தக னாய்நின்ற
ஆயர்க ளேற்றினைப் பாடிப்பற ஆநிரை மேய்த்தானைப்பாடிப்
(பற.

8. தென்னிலங்கை மன்னன் சிரந்தோள் துணிசெய்து
மின்னி லங்குபூண் விபீடண நம்பிக்
கென்னிலங்கு நாமத் தளவு மரசென்ற
மின்னிலங் காரற்கோர் கோல்கொண்டுவா வேங்கட வாணற்
(கோர் கோல்கொண்டுவா.

9. பேய்ச்சி முலையுண்ணக் கண்டு பின்னையும் நில்லாதென் னெ
(ஞ்சம்
ஆய்ச்சிய ரெல்லாருங்கூடி யழைக்கவும் நான்முலை தந்தேன்
காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்திற் பூரித்து வைத்தேன்
வாய்த்த புகழ்மணி வண்ணா மஞ்சன மாடநீ வாராய்.
(பிரபந்தம்.)

## கண்ணபிரான் அவலுண்ணல்.

பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை யதனை யின்னே
தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற தென்றான் றெரிவரும் வஞ்சக் கள்வன் (1)

இனியசிற் றுணவே தேனு மின்றிநீ வருவாய் கொல்லோ
வினியநின் னுள்ள மின்றே வெண்ணியா னறிதல் வேண்டு
மினியநின் மனைவி வாளா வேகியா வெண்ப ளோமற்
றினியவெற் கன்றி யார்க்குக் கொண்டுவந் திருக்கின்றாயே. (2)

திருந்தவிக் களித்தி யென்று செங்கர மலர்த்தி நீட்டப்
பொருந்தவின்பா லுண்பான்பாற் புளித்தகாடியைக்கொடுத்திட்
டருந்திடென் றுரைத்தல்போலிவ்வவற்கொடை யென்றுவாளா
விருந்தனன் குசேல மேலோ னிவனுள மறிந்த கண்ணன். (3)

நடலைதீர்ந் தவன்மெய் போர்த்த நாள்பல கண்ட கந்தைப்
படர்தலை சுருக்கி வாங்கிப் பாங்குவைத் தினிதி னாய்ந்து
விடலருங் கற்பு வாய்த்த மின்னனார் வணங்கித் தெய்வந்
திடமுற முடிந்து வைத்த சிறுபொதி கண்டு கொண்டான். (4)

மலிதரு மன்பின் வந்த வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்று ணன்று வாய்த்தது நமக்கீ தென்று
ஒலிதரு கழற்கா லைய னொருபிடி யவலைக் காதல்
பொலிதர வெடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான் மாதோ.

செறிதரு சுவைத்தி தென்றுந் தேவர்க்கு மரிய தாகும்
அரிதரு விரிப்பி னில்லி னமைத்ததே பழுது மன்று
குறிதரு விலைபாற் சென்று கோடலிவ் வளத்த தோவென்
றறியலை வாரி யுண்டோ வொருபிடி யவறின் றுனே. (6)

முன்னுமிவ் வவலொன் றேனு முனைமுறிந் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் றாகும் பட்டவக் கையு மணக்கும்
கொன்னுவாய் செறிப்பினம்ம குளமும்வேண் டுவதின றென்று
உன்னுபல் லுலக முண்டோ வொருபிடி யவறின் றுனே. (7)

நாட்டுமிவ் வவல் விருப்ப நமக்குமிக் குள்ள தென்று
கேட்டுளாய் கொல்லோமுன்னங் கிளந்திருப்பதுமன் றேயென்
னேட்டுமென் மலர்ப்பூந் தொங்க லிமையவர்க் கமுதமென்னுள்
ஊட்டிய புகழின் மேலோ வொருபிடி யவறின் றுணையே. (8)

அரியவன் பிணிற்கொ டுத்த விழிந்ததா யினுஞ் சிறந்த
திரியு மன்பினிற் கொடுத்த விழிந்ததே சிறந்த தேனும்
பெரியவர்ப் புகழப் பட்ட பெருந்தவக் குசல மேலோன்
உரியவன் பிணையுங் கூட்டி யொருபிடி யவறின் றுனே. (9)

# இரண்டாவது பாரம்.

## கடவுள் வணக்கம்

### திருமால்.

1. ஆதித் தனிக்கோல மானா னடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினன்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
வென்னென்றா னெங்கட் கிறை.

### சிவபெருமான்.

2. செக்கர் நெடுவானிற் றிங்க ணிலாத்துளும்பி
யுக்க தெனச்சடைமே லும்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்ப
ருள்ளத்தா னெங்கட் குளன்.

(புகழேந்தியார்)

### கலைமகள்.

3. பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யா
னெண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்து நிறைந்தாய் ! சகல கலாவல்லியே !

## தனிப்பாடல்.

### உடையால் உண்டாகும் சிறப்பு.

1. மேலாடை யின்றிச் சபை புகுந்தா லிந்த மேதினியோர்
நூலாயிரம் படித்தாலு மெண்ணார் நவல் பாற்கடலோ
மாலானவர் அணி பொன்னுடைகண்டு மகளைத் தந்தே
ஆலால மீந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே.

### திருநடனத்தின் இரகசியங் கூறல்.

2. பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை யறிவனோ
குழைநக்கும் பிஞ்சகன்தன் கூத்து.

### வாசுகி மரிக்க வள்ளுவர் இரங்கல்.

3. அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொல் தவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே! போதியோ?
என்தூங்கும் என்கண் இரா?

### சோதர லக்ஷணம்

4. செஞ்சுடரின் மைந்தனையுந் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிருந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

### கைத்தண்டின் பயன்.

5. முனிஅதட்டும் முள்தூக்கும் முந்நீர் அளக்கும்
கனிஉதிர்க்கும் கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரமதாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்தில் தண்டிருந்தக் கால்.

### செருப்பின் பயன்.

6. கல்லும் உறுத்தாது காலில்முள் தையாது
எல்லோரும் தாண்டன் றூடாது—தொல்லைவரு
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது
காலில் செருப்பிருந்தக் கால்.

## சிலேடை

### பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும்.

7. பெரிய விடமேசேரும்; பித்தர்முடி ஏறும்
அரியுண்ணும்; உப்புமேல் ஆடும் — எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பு மெலுமிச்சம் பழம்.

### பழக்கத்தினால் வருவனவும் பிறவியினால் வருவனவும்.

8. சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

### இதைவிட இது நன்று எனல்

9. ஏசி யிடலின் இடாமையே நன்றெதிரில்
பேச மனையாளிற் பேய்நன்று — நேசமிலா
வங்கணத்தின் நன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்தின் சாதலே நன்று.

### பலா, மா, பாதிரி உவமை.

10. சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே — நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

## நல்வழி.

1. பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

2. புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

3. எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லா
ரறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

4. ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்ட
மரிபாதை காணு மகிதலத்தீர்! கேண்மின்
தரிபாது காணுந் தனம்.

5. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கா
லிச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும்.

6. செய்தி வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா
லெய்த வருமோ விருநிதியப்—வையத்
தறம்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

7. தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்று
வெறுத்தாலும் போமோ விதி.

8. வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

9. கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானை
யில்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்.

10. தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

(ஔவையார்)

---

## நன்னெறி.

1. என்று முகம னியம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் ! பூங்கை புகழ்வோ
நாவிற் குதவு நயந்து.

2. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க—ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

3. நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

4. கடலே யனையயாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

5. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே னின்று.

6. பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந்—துய்பிற்
சுழற்றுங்கொல் கற்றாணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.

7. எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

8. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் — மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

9. கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்மு
னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே — வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு.

10. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார் — மின்னுமணிப்
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

(சிவப்பிரகாச சுவாமிகள்).

## நீதிநெறி விளக்கம்.

1. நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக — ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

2. அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு — முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

3. எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

4. கலைமகள் வாழ்க்கை முகத்த
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

5 வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

6. முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

7. ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலியதன்றே தாழுந் துலைக்கு

8. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பில்
தூங்குங் களிறோ துயருறா—வாங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று.

9. மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

10. கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார்.

(குமரகுருபரர்)

---

## பழமொழி விளக்கம்.

தன்மமதைச் செயல்வேண்டுந் தண்டலைநீ
ணெறியாரே தயவு செய்வார்
வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டாம்
பிறரையொன்றும் வருத்தல் வேண்டாம்
கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது
பலர்க்குமுப கார மாகும்
நன்மைசெய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார்
தீமைபெற்று நலிவர் தாமே. (1)

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங்
குலமுழுது நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவ துண்டோ
மன்றினடம் புரிவாரே ! தண்டலையாரே !
சொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல வீன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனாற் பயனுண் டாமே. (2)

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே ! தண்டலையா
ரே ! சொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. (3)

மானென்று வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான் மானே யென்று
தேனென்று மொழிபேசிச் சீதைதனைச்
சிறையிருக்கத் திருடிச் சென்றோன்
வானென்று மாசிழந்தான் தண்டலையார்
திருவுளத்தின் மகிமை காணீர்
தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று
நினைப்பதுவுஞ் சகசந் தானே ! (4)

நேற்றுள்ளா ரின்றிருக்கை நிச்சயமாமோ
வாதலினா னினைந்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி யறந்தேடி
வைப்பதறி வுடைமை யன்றோ
கூற்றுள்ள மலைபவருந் தண்டலையா
ரே ! சொன்னேன் குடபால் வீசும்
காற்றுள்ள போதெவருந் தூற்றிக்கொள்
வதுநல்ல கருமந் தானே. (5)

(படிக்காசுப்புலவர்)

# சோமேசர் முதுமொழி வெண்பா.

தக்கனார் வேள்வித் தவத்தைமேற் கொண்டிருந்துந்
தொக்கவற மாயிற்றே சோமேசா—மிக்க
அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம். (1)

பன்னு மசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னாளே யௌவைமுன்பு சோமேசா—மன்னாத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். (2)

தீயனவே சொல்லுஞ் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (3)

ஒட்டலன்செய் தீமைக் கொருதுநம ரென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (4)

கூனியிரா மன்பிரிந்து போமாறு கூறினளே
தூநறும்பூங் கொன்றையணி சோமேசா—தானே
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர். (5)

போசன் கவிஞருக்கே போதப் பரிந்தளித்தும்
தூசிலாக் கீர்த்திகொண்டான் சோமேசா—வாசையுட
ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. (6)

வேந்துமகற் றேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதனை தாவிவிட்டான் சோமேசா—வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (7)

ஊனுக்கூ னென்னு முரைகண் டுவந்தனரே
தூநற்சீர்க் கண்ணப்பர் சோமேசா—வானதனாற்
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை. (8)

செவ்வேளைப் பாலனென வெள்ளித் திறலழிந்தான்
துவ்வாத வெஞ்சூரன் சோமேசா—வவ்வா
றுருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. (9)

நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெந்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா—புல்லிய
நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (10)

(மாதவச்சிவஞான யோகிகள்.)

## தமயந்தியின் சுயம்வரம்.

### நாடு.

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. (1)

### அரசன்.

ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டூடா
முருகுடைய மாதர் முகநனைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னங்கு. (2)

### செங்கோல்.

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்ப
தாதவிழ்பூந் தாரான தனிக்காத்தான்—மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு (3)

### நளன் சோலைப் புகுதல்.

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்றா முளரித் தலைவைகும்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. (4)

### அன்னத்தைப் பிடித்தல்.

அன்னந் தனைப்பிடித்தங் காயிழைபார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—யன்ன
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. (5)

### அன்னம் தமயந்தியைப் பற்றிக் கூறுதல்.

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையி
றமையந்தி யென்றோதுந் தையலாண் மென்றோ
ளமையந்தி யென்றோ ரணங்கு. (6)

### தமயந்தியின் குணம்.

நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு. (7)

நளன் தமயந்திக்கு முனக்கும் என்ன அடைவென்றதற்கு அன்னங் கூறுதல்.

பூமணிவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமணிவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தே நாம். (8)

அன்னம் நளனுக் குறுதி கூறுதல்

வீமன் றிருமடந்தை மென்மலரை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்ன
மொடுங்கிடையா டன்பா லுயர்ந்து. (9)

அன்னம் தமயந்தியினிடம் நளனைப் பற்றிக் கூறுதல்.

செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்க
டம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளனென்பான் வேந்த னுனக்கு. (10)

அன்னம் தமயந்தியின் வாக்கைப்பெற்று மீளுதல்.

வாவி யுறையு மடவனமே யென்னுடைய
வாவி யுவந்தளித்தா யாதியாற்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (11)

தமயந்தியின் மயக்கத்தைச் சேடியர் தாய்க்குக் கூறுதல்.

கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்க
ளுற்ற தறியா வுளநடுங்கிப்—பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற தொடி. (12)

தமயந்தியின் சுயம்வர நாள்.

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னுடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. (13)

### சுயம்வரத்துக்கு வந்த வரசர்கள்.

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிரைக்குந்
தாமத் தரிச்சந்திரன் சுவர்க்கி—நாமத்தாற்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே (14)
கோவேந்தர் செல்வக் குழாம்.

### நளன் புறப்பாடு

சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டா—னடற்கமைந்த
வில்லியரும் பொற்றூம வீமன் றிருமகளா
நல்லுயிரும் வாழு நகர். (15)

### நாரதரால் வானவரும் எழுதல்.

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. (16)

### வானவர் நளனைத் தூதனுப்பல்.

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
யெங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபாற்
றூதாக வென்றனைத் தோகையைத்தன் னாகத்தாற்
கோதாக வென்றனைக் கோ. (17)

### பிறர்காணு வரம்பெற்று நளன் தமயந்திக்குக் கூறல்.

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்கே
யூட்டுவா னெல்லா முரைத்து. (18)

### தமயந்தி விடை கூறல்.

இயமரநின் றார்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோண் மன்னா வகுத்த—சுயம்வரந்தா
னின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்குடையான்
றன்பொருட்டா னவா டளர்ந்து. (19)

### சுயம்வர மண்டபத்தை நளனு மடைதல்.

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல—முன்றிற்
குறிவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். (20)

### சேடியர் தமயந்திக்கு மன்னர்களைக் காட்டல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடு
மின்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினா
ளோர்வேந்தர் தமைத் தெரிந்து. (21)

### தமயந்தியின் கலக்கம்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுகின்
றாசலா டுற்றா ளுளம். (22)

### தமயந்தி தெய்வங்கோடல்.

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை—பன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (23)

### தமயந்தி நளனைத் தேர்தல்.

கண்ணிமைத்த லானடிகள் காசினியிற் றோய்தலான்
வண்ண மலர்மாலை வாடுதலா—னெண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னா
ளறிந்தா ளவன்றன்னை யாங்கு (24)

### தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்,

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தமமனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். (25)

# கஜேந்திர மோட்சம்.

செகதலத் தரச னைகர் செறி பரிச் சித்து ராசன்
சுகர்பதம் போற்றி செய்து சாற்றிமெய்ப் பொருது நின்ற
மாபல முசலி [illegible] ரணக்கை யன்று
கசபதி யுர்க்கி காதை தானைந் சொல்லு மென்றான். (1)

மாயவ னருளி னாலே வருந்திடும் உலகிற் கிபாதி
வியாதமா முனிமுன் னாளில் விளம்பிய கதையைப் பாண்டு
சேயெனுந் தருமனைந்தர் செய்யுநா ரதர்சொற் சேர்டு
நேயபா யானந் தோக்கிவன் வெளிபுட னிருந்த தேன்மோ.

அல்லி[illegible] நாளி[illegible] அரிந்தி[illegible] திக்குக்
தொல்[illegible] நகர் [illegible]
எல்லை [illegible] கரிணி யோடு
மெல்லுதல் லுராவு மேதடி மேய்க்கதால கெடிய தாரம். (3)

பங்கயப் பொய்கை தன்னைப் பார்த்துடன் பரிவாய்க் கோடி
அங்கயக் கரிணி யோடவ் வாரியி னிழிந்து தங்கள்
அங்கமுங் குளிரக் கோரப்ந்தாங் கருந்தியே தாகந் தீர்ந்து
பொங்கமாய்த் துமரி ராசன் புதுமலர் கொய்யுங் காலை. (4)

முன்பொரு சாபத் தால்கந் தருவனு முதலை யாகித்
தன்பெரும் பலத்தி னாலே சலத்திடை யிருந்து தங்கிப்
பின்வருங் காலை நாடிப் பிடிக்கிட உறைக்க கொந்து
வன்பெருங் கரவு மீண்டும் வந்துபின் தாளைக் கிட்டி. (5)

பற்றியே யிழுக்க மங்கப் பரிய முதலை யின்வல்
கெற்றிமைப் பிளப்ப னென்று நீண்டதன் துதிக்கை யாலே
மொத்திடக் காவு நீரில் சுழற்கியே மேல்வந் தெய்தி
வெற்றிசேரல் வியுமி லாமல் வெகுண்டுபோர் செய்யுங் காலை. (6)

கூடியே வந்துநின்ற கரிணிகள் கோடி தாமும்
வாடியே வெருவிச் சால மயங்கியே கரையி லேறி
நாடியே நோக்கி யின்று நாதனுக் கிந்தப் பாடு
தேடியே வந்தால் நம்மால் செய்வதென் ? என்று கூறி. (7)

ஆனையைப் பிரிந்து செல்ல அத்தியின் குழாங்கள் தங்கள்
காலெழா தாக நின்று மயங்கியே [illegible]
வேளையில் பற்றி நின்ற [illegible]
[illegible] (8)

கரையின் [illegible]
வரையுடன் [illegible] சேர்ந்து மற்றொரு [illegible]
நுரைபெற வொன்றைக் கொன்று நோக்கியே தாக்கி அங்கம்
உரைபடத் தசைகள் சிந்த உதிரமும் பெருக வன்றே. (9)

தந்தியும்நெடு நாள்கராவுடன் தாக்கி போசமர் செய்தநாளும்
நொந்து வாடியே நாலு திக்கையும் நோக்கியே மனமயக்கமாய்
முந்து தானுறை வெற்றிடத்தையும் முறைமை செய்திடு மு
(றைமையும்
எந்த நாளிலே காணு வேனினி யென்று பின்னு மியம்புமால்.

நூறு பத்திவருடங்கள் போர்செய்து நொந்து வாடியகுஞ்சரம்
பூரு வத்தினா ஞானம் வந்துபொ ருந்தியே வினை போக்கிட
வேறு திக்கிலை யென்ற நிந்தது வேண்டியே சருவேசனைக்
கூறி யேநெறி யைக்கொண் டேகரு ணைத்தி ருவேலது திக்கிடும்.

உருவ மாகியும் அருவ மாகியும் ஒருமை யாகியும் இருமையாய்
மருவ மாகியும் மருவு மாகியும் மாக வத்தவர் மதுரமாய்ப்
பெரிது மாகியும் சிறிதுமாகியும் போத மாகிய பேதமாய்க்
குருவு மாயுப தேச மாகிய கோவே நீரதி யென்றிடும். (12)

உண்டென்பார் அடியார் பங்கில் உத்தம ரிடத்தி லேயும்
உண்டென்ப பொருளை யான மெய்யாகிய ருளத்தி லேயும்
உண்டென்பர் சாது பக்கம் உறுதிமெய் யுரையி டத்தும்
உண்டென்பர் அந்தத்தெய்வ முள்ளதோ இல்லையோவென்னும்.

அந்தரந் தன்னை யானை யண்ணாந்து பார்த்துச் சொல்லும்
என்றனைக் காக்கத் திக்கா ரில்லையோ யிங்கே யாரும்
எந்தநே ரத்தி லீசன் வந்தெனைக் காப்பா னென்று
சிந்தனை பண்ணா ரெட்டுத் திசையினைத் திரும்பிப் பார்க்கும்.

இந்திரன் முனிவர் தேவர் இருடி யெண்டிக்கு ளோரும்
சந்திரன் பரிதி முக்கண் சங்கர னயன்மற் றோரும்
அந்தர வீதி நின்று யானையின் முறையைக் கேட்டு
எந்தடை விதுக்குத் திக்கா என்றுதாந் துயரின் நின்றார்.(15)

இப்படிச் சுரருஞ் சொல்ல இறைஞ்சிமன் னவன்க டைந்து
கைப்படி கண்டன் வேதன் வாசவன் மற்று ளோரும்
எப்படிப் பார்க்க லுற்றார் இடரொழித் திபத்தைக் காக்கச்
செப்பவொ லாமல் நின்ற செய்திதை யுரைசீ னென்றான் (16)

துங்கமா முனிவர் கேட்டுச் சுடர்முடி யரசை நோக்கிச்
சங்கையி லாமலத்தி தற்பரன் தானே யாகி
எங்களை நினைத்த திலலை யென்றுமன் னவன்மற் றோரும்
அங்கனே பார்த்தி ருந்தார் என்றுமின் னறைய லுற்றார். (17)

இடிநிகர் காவால காக்க மேயொய்ந்த வக்கராப் உயிர்சகிப் பாறிப்
படிவழுமுருக்கி வாலலைசைவற் றப் பரிவுடனைய் றமிப வொலியாய்
"இடியனைல அப்பாய்க் கால்வெளிபூ வாய் என்னுமுமா மூர்த்தி
(யின் முதலாய்
அடிகளா மாதிமூலமே" யெனுபம் முறைஅரி செவி நுழை
(போழ்தே. (18)

பங்கபத் திருவைப் பாரான் பணிமுத னிமலைக் தேடான்
சங்குசக் கரமு மேந்தான் தன்னெதிர் தொழுது நிற்கும்
இங்கிதக் கருடன் மீதி லேறிடான் இபத்தைக் காக்கக்
கங்கையைப் பெற்ற பாத சாரியாய்க் கடுகி வந்தான். (19)

துர்ச்சனர் கூடி நின்று தொடர்ந்தடி யாரைப் பற்றிப்
பச்சைமே னியனு முங்கள் பரமனெங் கேகாட் டென்று
மச்சரம் வைத்து மெத்த வாதைசெய் தாரோ? வென்றங்கு
அச்சுத னடைந்த போதில் அனைவரு மாலோ சித்தார். (20)

ரப் பிரியா லட்சுமி நாயகி யுடுத்த சேலை
பாதிமுன் தானை யந்தப் பாமனார் பற்றி யேகும்
போதுதான் நாமு மிந்தப் புதுமையை யறிது மென்று
மாதவன் பின் தொடர்ந்து மயிலெனச் செல்ல லுற்றாள். (21)

முடியவிழ் கேசஞ் சோர முகங்குறு வேர்வை கொள்ள
அடியிணை குழைய மெய்யி லணிமணி யார மாடக்
கொடியிடை துவள நீலக் கொண்டலின் மின்னல் போல
நெடியவன் பின்னை நுங்கி நேரிழை நடக்க லுற்றாள். (22)

செங்கண்மா லுருட னங்கு சேவகராய்ச் செல்லவே யெழுந்தாரமாம்
பங்கயப் புனல் மேவு தும்பியின் பயமகன்றிட வாறுமாற
செங்கதிர்த்திரள் கோடி போலவே மிகுமிடங்கள் வுயர் கிரியை
மங்கைநாயக னேவி யேமுந்தி வந்துநின்றனன் கரையின்வாய்.

மண்ட லம்மிரு பிளவ தாகவு மாதிரங்களும் வெடிபட
விண்ட லங்களுமி ளர்ந்த தாகவு மோருவுயர்மிக வுருகவே
குண்ட லஞ்சிர சுந்த ராங்கிடக் குடமிளைப்பொரு கரமிரு
துண்ட மாகவே செய்து மீண்டரி கையிலாழியு நின்றமர்ந்த. (24)

நீரிடை நெடிது நாளாய் நிலையற்று நின்ற யானை
பாரிய கரவு மாளக் கண்டுதன் பயம கன்று
காரிய முடிக்க விங்குக் காரண மாக வந்த
சீரிய திருமால் தன்னை நோக்கியே சிரசை யாட்டும். (25)

ஆடிய சிரசின் மீதில் அரிமலர்க் கையை வைத்து
வாடினை துயர மெய்தி மனமொரு மித்து நம்மை
நாடினை யினியோர் நாளும் நாசமே வாரா தென்றும்
நீடிய வுடலைக் கையால் தடவினன் நெடிய மாலும். (26)

காரெனு முருவ மாறிக் கந்தர்வ வடிவ மாகிப்
பரமனை வணங்கி யேத்தி யலர்மகள் பாதஞ் சேர்ந்து
திரமெனு கீதம் பாடித் தேவர்கள் வாழு கின்ற
புரநிலை யாகப் பெற்றுப் போயினன் ஊகூ வென்பான். (27)

(திருவடிதாசர்)

---

## மூன்றாவது பாரம்.

### கடவுள் வணக்கம்.

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே. (1)

—கம்பர்.

திருவந்த தொல்லைப் புவனந் தொகுதேவர் போற்றி
பெருவந் தனைசெய் தறிதற் கரும்பெற்றி யெய்தி
அருவந் தனையு முருவந் தனையு மன்றி நின்றான்
ஒருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம். (2)

—கந்தபுராணம்.

### கலாவல்லி.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக வுண்டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலாவல்லியே! (3)

—குமரகுருபர சுவாமிகள்.

### தமிழ்.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர். (1)

—பரஞ்சோதி முனிவர்.

இனமகலு மருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
    யிறைவனுடல் புக மொழிவரே
கனகமுக படகவள கரடதட விகடமத
    கரியின்மத மற நினைவரே
வனமருவு மருமுதலை யொருமதலை தரவினிய
    மதுரகவி மொழி முதல்வரே
யனகாபி நபாதல ரெம தருணைகிரி
    யடிகடம தடி யவர்களே. (2)

—எல்லப்ப நாவலர்.

## அடிகளாவார்.

பாதியா யழுகிய கால்கைய ரேனும்
    படுதொழிலு மிழிகுலமும் படைத்தாரேனும்
ஆதியாய் ! அரவணையா யென்பாராகில்
    அவரன்றே யாம்வணங்கு மடிகளாவர்
சாதியான் மதத்தான் மிக்கோ ரேனும்
    சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில நான்முகன் பணியப் பள்ளிகொள்வான்
    பொன்னரங்கம் போற்றுதார் புலையர்தாமே. (1)

(பிள்ளைப் பெருமாளையங்கார்)

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
    தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
    மாதேவர்க் கேகாந்தர் அல்லார் ஆகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
    ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பர் ஆகில்
    அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே. (2)

—திருநாவுக்கரசர்.

## நீதி.

### திருக்குறள்.

கற்றதனால் ஆயபயன் என்கொல்? வால் அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (1)

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (2)

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். (3)

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்? எனுஞ் சொல். (4)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (5)

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (6)

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (7)

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (8)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும். (9)

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (10)

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. (11)

—திருவள்ளுவர்.

4747a

## நாலடியார்.

தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு—மாற்ற
அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில். (1)

—செல்வம்.

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு. (2)

—இளமை.

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம். (3)

—அறம்.

கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து. (4)

—தூய்மை.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு. (5)

—வெகுளி.

## பழமொழி.

நெறியா லுணராது நீர்மையு மின்றிச்
சிறியார், எளியரா லென்று—பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று. 1

—கீழ்மக்கள் செய்கை.

தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம்—அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறையிருவர் நட்பு. 2

—நட்பு.

வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்
கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர் கண்ணாய்! ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம். 3

வருவாய் சிறிதெனினும் வைகலு மீண்டின்
பெருவாய்த்தாய் நிற்கும் பெரிதும்—ஒருவா
றொளியீண்டி நின்றால் உலகம் விளக்கும்
துளியீண்டில் வெள்ளந் தரும். 4

---

## நான்மணிக் கடிகை.

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. 1

இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 2

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. 3

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரச னிலாவழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில். 4

## திரிகடுகம்.

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க—வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 1

பொய்வழங்கி வாழும் பொறியறையுங் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்—ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானு மிம்மூவர்
நட்கப் படாஅ தவர். 2

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்ற லிம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 3

உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் செல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில். 4

தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார். 5

## ஆசாரக்கோவை.

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கு
மையத்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பி
னையம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்
தெய்வமுஞ் செற்று விடும். 2

## ஏலாதி.

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்!
விண்ணவர்க்கு மேலாய் விடும். 1

அறுவர் தந்நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறான நீக்கி—மறுவரவின்
மாசா ரியனா மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசா ரியன தமைவு. 2

## புலவர் வறுமை.

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான்! ஐயோஎங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே. 1

—இராமச்சந்திர கவிராயர்.

எண்ணான்கு முப்பத் திரண்டுபல் காட்டி இசையுடனே
பண்ணாகச் செந்தமிழ் பாடிவந் தாலும் இப்பாரி லுள்ளோர்
ஆண்ணுறுக்கு மீநட்டார் அழகு மெனார் அதன்பிறகு
சுண்ணாம்பு பட்ட இலையும் கொடார்கவி சொன்னவர்க்கே 2

—தனிப்பாடல்.

நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயுநின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

—சத்திமுத்தப் புலவர்.

## வாமனாவதாரம்.

கால னிகர்த்துணர் காசிப னென்னும்
வாலறிவற் கதிதிக் கொரு மகவாய்
நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தி னருக்குற ளானான். 1

முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதோர் நாவ னனற்படு கையன்
அற்புத னற்புத ரேயறி யுந்தன்
சிற்பத மொப்பதோர் மெய்க்கொடு சென்றான். 2

அன்றவன் வந்த தறிந்தில கெல்லாம்
வென்றவன் முந்தி வியந்தெதிர் கொண்டான்
நின்றனி னந்தண ரில்லை நிறைந்தோய் !
என்றனி னுய்ந்தவர் யாரினி யென்றான். 3

ஆண்டகை யவ்வழி கூற வறிந்தோன்
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யாயினி [illegible]ன்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் மாண்பில ரென்றான். 4

சிந்தை யுவந்தெதி ரென்செய வென்றான்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திற லாயிது வேண்டு மெனாமுன்
தந்தன னென்றனன் வெள்ளி தடுத்தான். 5

கண்ட திறத்தது கைதவ மைய !
கொண்ட னிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேனாள்
உண்டவ னாமி துணர்ந்துகொ ளென்றான். 6

நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரி யானது கைத்தல மெனனின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான். 7

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோய் !
வள்ளியராக வழங்குவ தல்லால்
எள்ளுவ தென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால். 8

கட்டுரை யிற்றம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்த முயன்றோர்
உட்டெறு வெப்பகை யாவது லோபம்
விட்டிட லென்று விலக்கினர் தாமே. 9

எடுத்தொரு வருக்கொருவ ரீதனின் முன்னே
தடுப்பது நினக்கழகி தோதகையில் வெள்ளி !
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய். 10

முடியவிம் மொழியெலா மொழிந்து மந்திரி
கொடியனென் றுரைத்தசொ லொன்றுங் கொண்டிலன்
அடியொரு மூன்றுநீ யளந்து கொள்கென
நெடியவன் குறியகை நீரி னீட்டினன். 11

கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுநிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே. 12

உலகெலா முள்ளடி யடக்கி யோடிக்
கலகிலா தவ்வடிக் கன்பன் மெய்யதாம்
இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய் ! சிறியன் சாலவே. 13

நின்றகான் மண்ணெலா நிரப்பி யப்புறம்
சென்றபா விற்றிலை சிறிது பாரெனா !
ஒன்றவா னகமெலா மொடுக்கி யும்பரை
வென்றகான் மீண்டது வெளிபெ றாமையே. 14

உரியதிந் திறத்திதென் றுலகை யீந்துபோய்
விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினன்
கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டவே. 15

—கம்பர்.

# இளையான்குடிமாற நாயனார்.

அம்பொ னீடிய வம்ப லத்தினி லாடு வாரடி சூடுவார்
தம்பிரானடி மைத்தி றத்துயர் சால்பின்மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையி னீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னாரிளை யான்கு டிப்பதி மாறனார். 1

ஏரின் மல்கு வளத்தி னால்வரு மெல்லை யில்லதோர் செல்வமு
நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின்மல்கிய வன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்றநீடு பயன்கொள்வார். 2

ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதோர் தன்மையா
னேர வந்தவர் யாவ ராயினு நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின். 3

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினி லொப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையி லமுதுசெய்யவளித்துளார்.

செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்ல னல்குர வான போதினும் வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்பதம்புக வுன்னினார் தில்லை மன்னினார்

இன்ன வாறு வளஞ்சு ருங்கவு மெம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குத லின்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறி யிறுக்க வுள்ள கடன்க டக்கன கொண்டுபின்
முன்னைமாறி றிருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கையராயினார்.

மற்ற வன்செய லின்ன தன்மைய தாக மாலய னுணவக்
கொற்ற வேனமு மன்ன முந்தெரி யாத கொள்கைய ராயினர்
பெற்ற மூர்வது மின்றி நீடிய பேதை யாளுட னின்றியோர்
சுற்ற வத்தவர் வேட மேகொடு ஞால முய்ந்திட நண்ணினர்.

வேறு.

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்ல மடைத்தபின் பண்புற
வேரித் தாரன் விருந்தெதிர் கொண்டனன் 8

ஈர மேனியை நீக்கி யிடநகொடுத்
தார வின்னமு தூட்டுதற் காசையாற்
றூர மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்னென. 9

நமக்கு முன்பின் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசி றகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென. 10

மாது கூறுவாள் மறுமுறை றுறை காண்கிலன்
ஏதி லாரு மினித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று. 11

செல்ல னீங்கப் பகல்வித் தியசெந்நென்
மல்ல னீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற, 12

மற்ற மாற்ற மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வ மெனப்பெரி துண்மகிழ்ந்
துற்ற காதலி னொருப் பட்டனர்,
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். 13

எண்ணு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன்றமுன் றோன்றிடல்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து. 14

உள்ள மன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லாரிளை யான்குடி மாறனார். 15

காலி னாற்றட விச்சென்று கைகளாற்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 16

வந்தபின் மனைவி யாரும் வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி
வெந்தழ லடுப்பின் மூட்ட விறகில்லை யென்ன மேலோர்
அந்தமின் மனையி னீடு மலக்கினை யறுத்து வீழ்த்தார். 17

முறித்தவை யடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி வாக்கிய வுலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
றிக்கினி யென்செய் கோமென் றிறைஞ்சினார் கணவ னாரை.

வழிவரு மிளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
அழிவுறு மைய னென்னு மன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. (19

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினில் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினாற் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று (20

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தவரை யீண்ட வமுதுசெய் விப்போ மென்ன
உணர்வினா லுணர வொண்ணா வொருவரை யுணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயி லகற்ற லுற்றார். (21)

அழுந்திய விடரு நீங்கி யடியனே னுய்ய வென்பால்
எழுந்தருள் பெரியோ யீண்ட வமுதுசெய் தருள்க வென்று
தொழும்பனா ருரைத்தபோதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார். (

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் றான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலா டன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி. (23

அன்பனே யன்பர் பூசை யளித்தநீ யணங்கி னோடும்
என்பெருந் தலத்தை யெய்தி யிருநிதிக் கிழவன் றானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி யேவல் கேட்ப
இன்பமார்ந்திருக்கவென்றே யருள்செய்தானெவர்க்குமிக்கான்

—சேக்கிழார் சுவாமிகள்.

47470